**செய்தி வெளியீடு எண்:734** **நாள்: 02.11.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (2.11.2017) தலைமைச் செயலகத்தில், தொழில் துறைக்கான இணைய தள வழி ஒற்றைச் சாளர தகவினை (**https://www.easybusiness.tn.gov.in**) துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதற்கு ஓர் ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச் சாளர தகவினை (Single Window Portal) தமிழ்நாடு அரசின் தொழில் துறை உருவாக்கியுள்ளது. இந்த ஒற்றைச் சாளர தகவு மூலமாக, நகர மற்றும் ஊரமைப்பு திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் போன்ற 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குதல், அனுமதிகளை புதுப்பித்தல் ஆகிய சேவைகளை பெற இயலும். இவ்வசதியின் மூலம், மனித நேரடித் தொடர்பு இன்றி பல்வேறு அரசு துறைகளின் 37 சேவைகளை முதலீட்டாளர்கள் இணையம் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் இத்தகவின் மூலம், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தவும் இயலுவதோடு, குறுஞ்செய்திகள் மற்றும் மின் அஞ்சல் அறிவிக்கை மூலம் விண்ணப்பங்களின் நிலையினை தெரிந்து கொள்ளவும், இறுதி ஒப்புதல்களை மனுதாரர் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும். இத்தகவினை நடைமுறைக்கு கொண்டுவந்ததன் மூலம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேலும் வலுவடையும்.

ஒவ்வொரு அனுமதியை பெறுவதற்கும் கால நிர்ணயம் செய்வதன் மூலம் ஒற்றைச் சாளர முறையினை வலுப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு, சமீபத்தில் அவசர சட்டம் மூலமாக தமிழ்நாடு வணிக எளிதாக்கும் அவசர சட்டம் / விதிகள், 2017 ஆகியவற்றை கொண்டு வந்துள்ளது. இந்த அவசர சட்டம் மற்றும் விதிகளில் தொழில்துறைக்குத் தேவையான அனுமதிகளை அரசுத் துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உரிய காலத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிக்க உயர் நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு குறைகளை நிவர்த்தி செய்யும் அமைப்பாக செயல்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பி. பெஞ்சமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி த. சபிதா, இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் திரு. ராஜேந்திர குமார், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தொழில் துறை கூடுதல் செயலாளர் திரு.எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநிலக் குழு தலைவர், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில குழு தலைவர், மெட்ராஸ் வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பின் தலைவர், ஒருங்கிணைந்த இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பின் தெற்கு மேம்பாட்டுக் குழு இணைத் தலைவர், தமிழ்நாடு சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 2.11.2017**